இயல் ஒன்பது

*மனிதம், ஆளுமை*

# அன்பென்னும் அறனே



## கற்றல் நோக்கங்கள்

- *சான்றோர்கள், அறிஞர்கள் ஆகியோரின் உழைப்பாகிய உரத்தில் தமிழ்ப்பயிர் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, தம்மால் இயன்ற பங்களிப்பை நல்குதல்*
- *புதுக்கவிதைகளைப் படிப்பதால், தற்காலக் கவிதையின் போக்கினை அறிதல்*
- *குறிப்பிட்ட தலைப்பில் கருத்துகளைத் திரட்டிக் கலந்துரையாடும் திறன் பெறுதல்*
- *மனிதம் சார்ந்த படைப்புகளைப் படிப்பதன் வாயிலாக மனிதநேயப் பண்புடன் வாழ்தல்*
- *நூலின் மதிப்புரைகளைப் படித்தறிந்து அதுபோல எழுத முனைதல்*
- *அணியிலக்கணத்தை அறிந்து கவிதையைச் சுவைத்துப் படித்தல்*




9th_Tamil_Pages 122-264.indd 231 23-01-2020 20:21:24

உரைநடை உலகம்

மனிதம்

௬

# விரிவாகும் ஆளுமை




*தமிழியல் ஆய்வு வளரக் காரணமாக இருந்த தமிழறிஞர் பலர். பேராசிரியர் தனிநாயகம் அவர்கள் இதழ்கள், கருத்தரங்குகள், மாநாடுகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் தமிழியலை உலகச் செயல்பாடாக ஆக்கினார். தமிழின் பரப்பையும் சிறப்பையும் உலகின் பல நாடுகளில் பரவலாக்கினார். அவரது வாழ்வு, தமிழ் வாழ்வாகவே இருந்தது. அவர் இலங்கையில் யாழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை, மனிதனுக்குத் தேவையான ஆளுமை பற்றி விளக்குகிறது.*

LQWP8H

உலக நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டுவது நம் இயல்பு. இது இருபதாம் நூற்றாண்டில் வானூர்திப் போக்குவரத்து வளர்ந்த பின்பு தோன்றியதோர் பண்பு என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. பண்டைத் தமிழ் இலக்கியங்களிலேயே தமிழ்ப்புலவர்களால் இப்பண்பு பாராட்டிப் பாடப்பட்டுள்ளது. அக்காலத்திலேயே ஒரு நாட்டவர் பிற நாட்டவரோடு உறவு பாராட்ட விரும்பியுள்ளனர். இதனைக் கீழ்க்காணும் இரு செய்யுள்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்னும் கொள்கை எல்லா நூற்றாண்டுகளுக்கும் பொருத்தமாக உள்ளது.

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு** (குறள்.397)

என்னும் திருக்குறள், முன்பு எப்போதையும்விட நம் காலத்திற்குப் பொருத்தமான அறிவுரையாக விளங்குகின்றது.

மேற்கண்ட பாடல்களில் ஆளப்பட்டுள்ள 'ஊர்', 'நாடு', 'கேளிர்' என்னும் தமிழ்ச்சொற்கள் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பொருண்மைகளைக் கொண்டிருக்கலாம். ஆயினும், இம்மேற்கோள்கள் காட்டும் பரந்த ஆளுமையும் (personality) மனித நலக் கோட்பாடும் (humanism) இலத்தீன் புலவர் தெறென்ஸ் (Terence) கூறிய கூற்றுடன் ஒப்பிடத்தக்கவை ஆகும். "நான் மனிதன்; மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று" என்பதே அவரது கூற்று.



## மூன்று இலக்கணங்கள்

முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றியமையாதவை என்கிறார் கோர்டன் ஆல்போர்ட் (Gordon Allport) என்னும் உளநூல் வல்லுநர். முதலாவதாக மனிதன், தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும்; பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக்கூடிய வகையில் தன் ஆளுமையை விரிவடையச் செய்து செழுமைப்படுத்த வேண்டும். இரண்டாவதாக, ஒருவன் பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறானோ அதை அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவனாக



9th_Tamil_Pages 122-264.indd 232 23-01-2020 20:21:25

இருத்தல் வேண்டும் (self objectification). மூன்றாவதாக அவனது வாழ்க்கைக்குத் தன் ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும் (unifying philosophy of life-self-unification).

இலட்சியங்களைக் கடைப்பிடித்தும் கற்பித்தும் வருவதால்தான் சமுதாயம் முன்னேற்றம் அடைகிறது. அது மக்களுக்கு வேண்டிய இன்பத்தையும் சீர்திருத்தத்தையும் அளிக்கின்றது. குறிக்கோள் இல்லாத சமுதாயம் வீழ்ச்சி அடையும் என்னும் உண்மையைப் பண்டைக் காலத் தமிழரும் நன்கு உணர்ந்திருந்தனர். குறிக்கோள் இல்லாதவன் வெறும் சதைப்பிண்டம் என்பதைப் "பூட்கையில்லோன் யாக்கை போல" (புறம். 69) என்னும் அடியில் புலவர் ஆலத்தூர்கிழார் நிலைநாட்டுகிறார்.

## பிறர் நலவியல்

விரிவாகும் ஆளுமையை உருவாக்கும் நோக்கம் கொண்டுள்ள மக்கள் சமுதாயமே இன்பத்தை அளிக்கும் சமுதாயமாகக் காணப்படும். எந்த அளவிற்குப் பிறர் நலத்திற்காக மனிதன் பாடுபடுகின்றானோ அந்த அளவிற்கு அவனது ஆளுமை வளரும். பிறருக்காகப் பணி செய்வதால்தான் ஒருவனுடைய வாழ்க்கை, பண்புடைய வாழ்க்கை ஆகின்றது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் குறிக்கோள், வாழ்க்கையைத் தன்னலம் தேடுவதிலிருந்து விடுவித்து ஆளுமையை முழுமைப்படுத்தும் பண்பாக ஆக்குகின்றது.

பிறர் நலவியல் (Altruism) என்னும் பண்பு, மக்கள் வரலாற்றில் படிப்படியாகத்தான் தோன்றும். மேம்படாத சமுதாயத்தில் மனிதன் தன்னுடைய குடும்பத்தையும் தன் இனத்தையும் (tribe) காப்பாற்றவே முயல்வான். படிப்படியாக அறிவு வளர வளர எங்கு வாழ்ந்தாலும் மக்கள் அனைவரும் தன் இனத்தவர்; எல்லா உயிர்க்கும் அன்புகாட்டுதல் வேண்டும் என்னும் சிந்தனை அவனுக்குத் தோன்றும்.

வெவ்வேறு பண்பாடுகள் வெவ்வேறு காலத்தில் பிறர் நலவியலைக் கற்பித்து வந்திருக்கின்றன. சீனநாட்டில் பொ.ஆ.மு. 604ஆம் ஆண்டில் பிறந்த லாவோட்சும் (Lao-Tse) அவருக்குப் பின்பு கன்பூசியசும் (Confucius பொ.ஆ.மு. 551-479) தம் காலத்திலேயே இந்தக் கொள்கையை ஒருவாறு தெளிவாகக் கற்பித்துள்ளனர். ஆனால், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்கத் தத்துவ ஞானிகள் கிரேக்கக் குடியினரை மட்டுமே தம் சிந்தனைக்கு உட்படுத்தினர்.

பண்டைக்கால தருமசாத்திர நூல்களும் பிறரைக் கவனத்தில் கொள்ளவில்லை. 'விந்திய மலைத்தொடருக்கும் இமய மலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பே கருமபூமி; வீடுபேறு அடைவதற்கு அப்பூமியிலே பிறந்திருக்க வேண்டும்' என்பதே அவற்றின் கருத்தாக இருந்தது.

தமிழ் மக்களிடமோ, ஸ்டாயிக்வாதிகள் கூறியதுபோல 'மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்; பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது' என்னும் நம்பிக்கை பண்டுதொட்டே நிலவியுள்ளது. இந்திய வரலாற்றில் பண்டைக் காலத்திலேயே இத்தகைய அரிய கொள்கையைத் தமிழ் மக்கள் கடைப்பிடித்திருந்தனர் என்னும் உண்மை பெரும் வியப்பைத் தருகின்றது. ஒழுக்கவியலை (Ethics) நன்கறிந்து எழுதிய உலகமேதை ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றிக் கூறும்போது "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது" என்பார். ஆனால், இத்தகைய கொள்கைகள் திருவள்ளுவர் காலத்திற்கும் முன்பே தமிழ் மக்களால் போற்றப்பட்டுள்ளன.

## ஒற்றுமை உணர்ச்சி

தமிழ் இலக்கியத்தை ஆராயும்போது, பிறர் நலக்கொள்கையையும் பிறர் மீதான அன்பு பாராட்டலையும் முதன்முதலில் பரப்புவதற்குக் காரணமாய் இருந்தவர்கள்



9th_Tamil_Pages 122-264.indd 233 23-01-2020 20:21:25

தமிழ்நாட்டுப் பாணரும் புலவருமே ஆவர் என்பதை அறிய முடிகிறது. பாணர்க்கும் புலவர்க்கும் சொந்த ஊரும் நாடும் உண்டு. ஆயினும், அவர்கள் தமிழ் வழங்கும் இடமெங்கும் சென்று அரசர்களையும் வள்ளல்களையும் மக்களையும் வாழ்த்தி வந்ததால் 'தமிழகம்' என்ற ஒற்றுமை உணர்வு உண்டானது. அம்மொழி பரவிய நிலம் அனைத்தையும் "தமிழகம்" என்றும் "தமிழ்நாடு" என்றும் வாழ்த்தினர்.

பிறநாடுகளைக் குறிப்பிடும் போது வேற்று நாடு, பிறநாடு என்று குறிக்காது மொழிமாறும் நாடு – மொழிபெயர் தேயம் – என்றே வரையறுத்துக் கூறியுள்ளனர்.

### இலக்கணத்தில் பரந்த மனப்பான்மை

அகத்திணை இலக்கியம் பல்வேறு வழிகளில் பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் வளர்த்தது. ஐவகை நிலங்களின் பெரும்பொழுது, சிறுபொழுது, கருப்பொருள் ஆகியவற்றைப் புலவரும் பாணரும் இலக்கியம் பயில்வோரும் தவறாது கற்றுவந்தனர். தொல்காப்பியர் நிலத்தைப் பிரித்தமுறை உலகின் பிரிவாகவே அமைந்தது.

*படுதிரை வையம் பாத்திய பண்பே –*

*(தொல். 948)*

களவொழுக்கத்திலும் கற்பொழுக்கத்திலும் பிற உயிரொன்றைக் காதலிப்பதாலும் குழந்தைகளைப் பேணுவதாலும் இருவருடைய ஆளுமையும் இன்னும் விரிவடைய வாய்ப்பிருந்தது. புலவர்கள் தம் செய்யுள்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய் ஆகியோரைக் கற்பனை செய்து பாடுவதால் பிறர் பற்றி அறியும் பண்பை அவர்கள் எளிதாகப் பெற்றிருக்க வேண்டும்.

### நன்மை நன்மைக்காகவே

அன்பு வாழ்க்கையிலும் பிறருடன் கலந்து வாழும் முறைகளிலும் பிறர்நலம் பேணுவதிலும் தமிழ்ப் பண்பாட்டின் இன்றியமையாத கொள்கை உருப்பெறுகிறது. கடையெழு வள்ளல்களுள் ஒருவரான ஆய் என்பவரைப் போற்றுவதற்குக் காரணம் அவர், நன்மையை நன்மைக்காகவே செய்ததுதான். பிறர் போற்றுவார்கள் என்றோ வேறு நலன்களைப் பெறலாம் என்றோ அவர் நன்மைகளைச் செய்யவில்லை.

***இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்***
***அறவிலை வணிகன் ஆய் அலன்***

*– புறம். 134 ( அடி 1 – 2 )*

பிறர்க்காக வாழும் மக்கள் இவ்வுலகில் இல்லையென்றால், நாம் வாழ்வது அரிது. பிறர்க்காக வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும் ஆகும். "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறப்பாட்டு இந்தப் பண்பை அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

**உலகத்தமிழ் மாநாடுகள்**




செம்மொழி மாநாடு 2010இல் கோவையில் நடைபெற்றது.



9th_Tamil_Pages 122-264.indd 234 23-01-2020 20:21:26

பண்புடைமை என்னும் அதிகாரத்திற்கு உரை கண்ட பரிப்பெருமாள் பின்வருமாறு கூறியுள்ளார்: "பண்புடைமையாவது யாவர்மாட்டும் அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும் பகுத்து உண்டலும் பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை".

## இமயவரம்பு

இதுவரை வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் விரிவான ஆளுமையின் வளர்ச்சியைக் கண்டோம். ஆனால், தமிழ் ஈடுபாடு, தமிழகத்தோடு நிற்கவில்லை.

வட இந்தியாவுடன் தொடர்புகள் வளர வளரக் கங்கையும் இமயமும் அடிக்கடி தொகைநூல்களில் எடுத்தாளப்பட்டன. இமயமலை, நீடிக்கும் உறுதிக்கு மேற்கோளாகக் காட்டப்படுகின்றது.

*இமயத்துக்*
*கோடு உயர்ந்தன்ன தம் இசை நட்டுத்*
*தீது இல் யாக்கையொடு மாய்தல்*
*தவத்தலையே*

*(புறம். 214, 11–13)*

புலவர்கள் குமரி ஆறு, காவிரி ஆறு போன்ற மணல் நிறைந்த இடங்களை நீண்ட வாழ்க்கைக்கு உவமையாகக் கூறுகிறார்கள். அத்துடன் கங்கையையும் இமயத்தில் பெய்யும் மழையையும் உவமையாகச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

*"இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்*
*கொண்டல் மாமழை பொழிந்த*
*நுண்பல் துளியினும் வாழிய பலவே".*

*– புறம் 34 (அடி 21–23)*

சில புலவர்கள் இமயத்தையும் கங்கையையும் தமிழ்நாட்டு மலைகளுடனும் ஆறுகளுடனும் சேர்த்தே பாடுகின்றனர்.

## ஒவ்வொருவரும் சான்றோர் ஆகலாம்

திருக்குறளில் பூட்கைமகன் அல்லது குறிக்கோள் மாந்தனின் இயல்புகள் பல கூறப்பட்டிருக்கின்றன. ஒன்று பிறர்பால் அன்புடைமை ஆகும். இல்லற வாழ்க்கையின் நோக்கம் ஈகை, விருந்தோம்பல் போன்ற பண்புகளால் ஆளுமையை வளர்த்தல் ஆகும்.

தமிழ் மக்கள் "சான்றோன்" எனப்படும் குறிக்கோள் மாந்தனைப் பாராட்டிய காலத்தில் இத்தாலிய நாட்டில் உரோமையர் "sapens" (அறிவுடையோன்) எனப்படும் இலட்சிய புருஷனைப் போற்றி வந்தனர். உரோமையருடைய "சாப்பியன்ஸ்" அல்லது சான்றோன் என்பவன் சமுதாயத்திலிருந்து விலகி, தன் சொந்தப் பண்புகளையே வளர்ப்பனாக இருந்தான். உரோமையருடைய சான்றோர் அரிதாகவே சமுதாயத்தில் தோன்றுவர்.

ஸ்டாயிக்வாதிகளின்படி அவர்களுடைய இலட்சிய மனிதர்கள் ஒரு சிலரே. அச்சிலர் தனிமையாகத் தம் இல்லங்களில் வாழ்ந்து வருவர். திருக்குறளின் சான்றோரோ பலர். பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நட்பு முதலான அதிகாரங்களில் இச்சான்றோனுடைய இயல்புகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் சான்றோன் ஆதல் கூடும். அவனை அவ்வாறு ஆக்குவதே கல்வியின் நோக்கம். ஒவ்வொரு தாயும் தன் மகன் சான்றோன் ஆக வேண்டும் என்றே எதிர்பார்ப்பாள். தன் பிள்ளையைச் சான்றோன் ஆக்குதல் ஒவ்வொரு தந்தைக்கும் கடனாகும்.

தமிழ்ச் சான்றோன் சமுதாயத்திலேயே வாழ்ந்து தன்னால் இயன்றவரை சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்வான். பிசிராந்தையார், கோப்பெருஞ் சோழனுக்குக் கூறியது போலத் தமிழ்ச் சான்றோர் பலர் வாழும் ஊரே வாழ்க்கைக்கு இன்பத்தைத் தருவதாகும் (புறம் 191).

## ஒன்றே உலகம்

உரோம நாட்டுச் சிந்தனையாளர்களும் ஏறத்தாழத் தமிழ்ப் புலவர்களைப் போல அதே காலத்தில் ஒன்றே உலகம் என்ற கொள்கையைப் பாராட்டி வந்தனர்.



9th_Tamil_Pages 122-264.indd 235 23-01-2020 20:21:26

ஸ்டாயிக்வாதிகள் உலகில் ஒற்றுமை உண்டு என்றும், மக்கள் அனைவரும் ஒரே குலத்தவர் என்றும், எல்லா உயிர்களும் தொடர்பால் இணைக்கப்பட்டுள்ளன என்றும் கற்பித்தனர். ஒன்றே உலகம் என்ற மனப்பான்மையும் கொள்கையும் முதன்முதல் மேலை நாட்டில் ஸ்டாயிக்வாதிகளால் போற்றப்பட்டது.

செனக்கா என்னும் தத்துவ ஞானி கூறியதாவது: "எல்லாருடைய நாடுகளும் நமக்குத் தாய் நாடு என்றும், நம் நாடு எல்லா மக்களுக்கும் தாய் நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்".

மார்க்ஸ் அரேலியஸ் என்னும் பேரரசர் கூறியதாவது: "நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்; நான் அன்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்; நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன்" இவ்வாறு உலக மாந்தரின் ஒற்றுமைத்தன்மை மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் மக்கட்தன்மையை வளர்க்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட நூல் திருக்குறள். ஜி.யு. போப் திருவள்ளுவரை "உலகப் புலவர்" என்று போற்றுவது மிகவும் பொருத்தமானதாகும்.

மக்கள் அனைவரையும் ஒரே குலத்தவர் என்று கருதுவதோடு உயிர்கள் அனைத்தையும் மக்களோடு சேர்த்து ஒரே குலத்தவை என்று கருதும் பண்பும் திருக்குறளுக்கும் ஸ்டாயிக் வாதிகளுக்கும் பொதுவான ஒரு தன்மை.

உரோம நாட்டவர் எழுதும்போது "நாம்", "நம்மவர்" என்ற செருக்கோடு உரோமரைக் கருதியே எழுதுகின்றனர். வள்ளுவரோ எல்லா உலகிற்கும் எல்லா மாந்தர்க்கும் பயன்படும் வகையில் உலகமெல்லாம் தழுவுவதற்குரிய பான்மையில் தம் நூலை யாத்துள்ளார்.

### விரிவாகும் ஆளுமை

இறுதியில், அன்பர்களே, திருவள்ளுவரின் கூற்றுடன் இவ்விரிவுரையை முடிக்க விரும்புகின்றேன். விரிவாகும் ஆளுமையைப் பற்றி ஒரு சில உண்மைகளைக் கண்டோம். திருவள்ளுவரோ இரண்டு அறவுரைகளில் இந்தக் குறிக்கோளை எவ்வாறு அடையலாம் என்று காட்டியுள்ளார். "உள்ளற்க உள்ளம் சிறுகுவ" (798) என்றும் "உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்" (596) என்றும் கற்பித்துள்ளார்.

### நூல் வெளி

தமிழுக்குத் தொண்டாற்றிய கிறித்துவப் பெரியார்களுள் தனிநாயகம் அடிகள் குறிப்பிடத்தக்கவர். அடிகளாரின் சொற்பொழிவுகள் தமிழர் புகழைப் பரப்பும் குறிக்கோளைக் கொண்டவை. இலங்கையில் யாழ்ப் பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய பஸ்கர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு, பாடமாக இடம்பெற்றுள்ளது. தம் சொற்பொழிவு வாயிலாக உலகம் முழுவதும் தமிழின் புகழைப் பரப்பினார். அகில உலகத் தமிழாய்வு மன்றம் உருவாகவும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் உருவாகவும் இவர் காரணமாக இருந்தார். இவர் தொடங்கிய தமிழ்ப் பண்பாடு என்ற இதழ் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கிறது.

## கற்பவை கற்றபின்...

1. உங்களுக்குப் பிடித்த தமிழ் ஆளுமைகள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்புகள் எழுதுக.
2. உலகத் தமிழ்மாநாட்டு மலர், பொங்கல் மலர், தீபாவளி மலர் போன்றவற்றில் வெளிவந்துள்ள உலகப் பொதுவியல் சிந்தனைகள் குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

LR6KA5

கவிதைப் பேழை

# மனிதம்

௯

## அக்கறை


– கல்யாண்ஜி

நுழையும்முன்

உரைநடையில் கவிதை எழுதுவதைப் பாரதி தம் வசன கவிதைகளின் வழியாகத் தொடங்கினார். அவற்றின் தொடர்ச்சியான கவிதைகளே புதுக்கவிதைகள். அவ்வகையில் புதுக்கவிதையின் வரலாறு நூறு ஆண்டுகளை எட்டுகிறது எனலாம். புதுக்கவிதைகள் மனித நேயத்தை வலியுறுத்துவனவாக இருக்கின்றன. பரபரப்பான இந்நூற்றாண்டு வாழ்வின் நெருக்கடியில் மனிதம் நசுங்கிவிடக்கூடாது என்பதைப் புதுக்கவிதைகளின் வாயிலாகக் கவிஞர் பலர் பல படிநிலைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். கல்யாண்ஜி கவிதைகளிலும் மனிதம் பரவலாக வலியுறுத்தப்படுகிறது.

LRFGBS

*சைக்கிளில் வந்த*
*தக்காளிக் கூடை சரிந்து*
*முக்கால் சிவப்பில் உருண்டது*
*அனைத்துத் திசைகளிலும் பழங்கள்*
*தலைக்கு மேலே*
*வேலை இருப்பதாய்க்*
*கடந்தும் நடந்தும்*
*அனைவரும் போயினர்*
*பழங்களை விடவும்*
*நசுங்கிப் போனது*
*அடுத்த மனிதர்கள்*
*மீதான அக்கறை**



### இலக்கணக் குறிப்பு

உருண்டது, போனது – ஒன்றன் பால் வினைமுற்றுகள்

சரிந்து – வினையெச்சம்

அனைவரும் – முற்றும்மை.

### பகுபத உறுப்பிலக்கணம்

சரிந்து = சரி + த்(ந்) + த் + உ;

சரி – பகுதி; த் –சந்தி (ந் ஆனது விகாரம்);

த் – இறந்தகால இடை நிலை;

உ – வினையெச்ச விகுதி.



9th_Tamil_Pages 122-264.indd 237 23-01-2020 20:21:27

## நூல் வெளி

கல்யாண்ஜியின் இயற்பெயர் கல்யாணசுந்தரம்; சிறுகதை, கவிதை, கட்டுரை, புதினம் எனத் தொடர்ந்து எழுதி வருபவர். வண்ணதாசன் என்ற பெயரில் கதை இலக்கியத்திலும் பங்களிப்புச் செய்துவருகிறார். புலரி, முன்பின், ஆதி, அந்நியமற்ற நதி, மணல் உள்ள ஆறு ஆகியவை அவரின் கவிதை நூல்களுள் சில. இவை தவிர, அகமும் புறமும் என்ற கட்டுரைத் தொகுப்பும் வெளிவந்திருக்கிறது. பல கடிதங்கள் தொகுக்கப்பட்டு, 'சில இறகுகள் சில பறவைகள்' என்ற பெயரில் வெளியானது. கலைக்க முடியாத ஒப்பனைகள், தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள், உயரப் பறத்தல், ஒளியிலே தெரிவது உள்ளிட்டவை இவரது குறிப்பிடத்தக்க சிறுகதைத் தொகுப்புகள். ஒரு சிறு இசை என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக இவருக்கு 2016ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

## கற்பவை கற்றபின்...

*நிலா, மழை, காற்று, தண்ணீர் போன்றவை குறித்த புதுக்கவிதைகளைத் திரட்டி, இலக்கிய மன்றத்தில் படித்துக் காட்டுக.*

LRPCDF

*(எ.கா.)*

### ஹைக்கூ

*இந்தக் காட்டில்*
*எந்த மூங்கில்*
*புல்லாங்குழல்?*

*– அமுதோன்*

*பிம்பங்களற்ற தனிமையில்*
*ஒன்றிலொன்று முகம் பார்த்தன*
*சலூன் கண்ணாடிகள்*

*– நா. முத்துக்குமார்*

*வெட்டுக்கிளியின் சப்தத்தில்*
*மலையின் மௌனம்*
*ஒரு கணம் அசைந்து திரும்புகிறது.*

*– ஜப்பானியக் கவிஞர் பாஷோ*



9th_Tamil_Pages 122-264.indd 238 23-01-2020 20:21:28

கவிதைப் பேழை

# மனிதம்

௯

## குறுந்தொகை

– பாலை பாடிய பெருங்கடுங்கோ

LRY8F3

**நுழையும்முன்**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று மனிதம் பேசிய சங்கக் கவிதைகள் தமிழ்ச் சமுதாயத்தின் மாண்புகளைக் காட்டும் காலக் கண்ணாடியாய்த் திகழ்வன. அவற்றுள் ஒன்றான குறுந்தொகை ஓர் அக இலக்கிய நூலாகும்; அதன் சிறப்புக் கருதியே 'நல்ல குறுந்தொகை' என்று அழைக்கப்படுகிறது; குறுந்தொகைப் பாடல்கள் பலவும் இயற்கைக் காட்சிகள் மூலம் அன்பின் வளத்தைப் படம்பிடித்துக் காட்டுவன. தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரைத் துடைக்கத் தோழி ஆறுதல் கூறுவதாக அமைந்த ஒரு பாடல் மனிதத்தை உணர்த்துகிறது.

*நசை பெரிது உடையர்; நல்கலும் நல்குவர்*
*பிடிபசி களைஇய பெருங்கை வேழம்*
*மென்சினை யாஅம் பொளிக்கும்*
*அன்பின தோழி அவர் சென்ற ஆறே.* (37)



பேரன்பு உடையவன் பெரிதுனக்குத் தருவான்
பொருள்தேடச் சென்றவன் பறந்தோடி வருவான்
பசித்தீ அணைக்க மெல்லிய யாமரக்
கிளையொடித்து உதவும் யானைக் காட்சியே
உன்நினைவு தூவி இங்கவனை அழைத்துவரும்
மலரினும் மெல்லியளே மனக்கவலை கொள்ளாதே

**திணை:** பாலை

**துறை:** தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றியது.



9th_Tamil_Pages 122-264.indd 239 23-01-2020 20:21:29

### சொல்லும் பொருளும்

நசை–விருப்பம்; நல்கல் –வழங்குதல்; பிடி–பெண்யானை; வேழம் –ஆண்யானை; யா–ஒரு வகை மரம், பாலை நிலத்தில் வளர்வது; பொளிக்கும் –உரிக்கும்; ஆறு–வழி

### பாடலின் பொருள்

*தோழி தலைவியிடம், ''தலைவன் உன்னிடம் மிகுந்த விருப்பம் உடையவன். அவன் மீண்டும் வந்து அன்புடன் இருப்பான். பொருள் ஈட்டுதற்காகப் பிரிந்து சென்ற வழியில், பெண் யானையின் பசியைப் போக்க, பெரிய கைகளை உடைய ஆண்யானை, மெல்லிய கிளைகளை உடைய 'யா' மரத்தின் பட்டையை உரித்து, அதிலுள்ள நீரைப் பருகச்செய்து தன் அன்பை வெளிப்படுத்தும்" (அந்தக் காட்சியைத் தலைவனும் காண்பான்; அக்காட்சி உன்னை அவனுக்கு நினைவுபடுத்தும். எனவே, அவன் விரைந்து உன்னை நாடி வருவான். வருந்தாது ஆற்றியிருப்பாயாக) என்று கூறினாள்.*

*இப்பாடலில் இறைச்சி அமைந்துள்ளது.*

### இலக்கணக் குறிப்பு

களைஇய – சொல்லிசை அளபெடை, பெருங்கை, மென்சினை – பண்புத் தொகைகள்,

பொளிக்கும் – செய்யும் என்னும் வினைமுற்று, பிடிபசி – ஆறாம் வேற்றுமைத் தொகை, அன்பின – பலவின்பால் அஃறிணை வினைமுற்று,

### பகுபத உறுப்பிலக்கணம்

உடையர் = உடை+ ய் + அர்

உடை – பகுதி

ய் – சந்தி (உடம்படுமெய்)

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

பொளிக்கும் = பொளி + க் + க் + உம்

பொளி –பகுதி

க் – சந்தி; க் –எதிர்கால இடைநிலை

உம் – வினைமுற்று விகுதி

### நூல் வெளி

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இது, தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது; கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது. இதன் பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டவை. 1915ஆம் ஆண்டு சௌரிப்பெருமாள் அரங்கனார் முதன் முதலில் இந்நூலைப் பதிப்பித்தார். நமக்குப் பாடமாக வந்துள்ளது 37ஆவது பாடல் ஆகும். இப்பாடலின் ஆசிரியர் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ'. இவர் சேர மரபைச் சேர்ந்த மன்னர்; கலித்தொகையில் பாலைத் திணையைப் பாடியதால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என அழைக்கப் பெற்றார்.

## கற்பவை கற்றபின்...

*நீங்கள் கண்ட/ உதவிசெய்து மனம் நெகிழ்ந்த நிகழ்வை வகுப்பறையில் பதிவு செய்க.*

LS84GQ



9th_Tamil_Pages 122-264.indd 240 23-01-2020 20:21:29

விரிவானம்

மனிதம்

௯

# தாய்மைக்கு வறட்சி இல்லை!

**– சு. சமுத்திரம்**

நுழையும்முன்

*மனிதம் குறித்து எல்லாவகை இலக்கியங்களும் பேசுகின்றன . மனிதத்தை நிலைநாட்டவே சான்றோர் பலரும் முயல்கின்றனர். எது வறண்டாலும் மனிதம் வறண்டுவிடக் கூடாது என்பது பன்னெடுங்கால விழைவாகவும் செய்தியாகவும் திகழ்கிறது. தமிழ்ச் சிறுகதைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. தாய்மை வழியே மனிதம் காக்கப்படுவதை, சு.சமுத்திரம் அவர்களின் சிறுகதை உணர்த்துகிறது.*

LSGZID



கர்நாடக மாநிலத்தின் வடமாவட்டத் தலைநகரான குல்பர்கா நகரைத் தாண்டிய அந்த தேசிய நெடுஞ்சாலை, ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் காடுகளுக்கு மத்தியில் மலைப்பாம்புபோல் நெளிந்து கொண்டிருந்தது... நகரச் சந்தடியில்லாமல் நிசப்தம் நிலவிய அந்தக் காட்டின் மவுனம், உள்மனதிற்குப் பேரிரைச்சலாய் ஒலித்துக் கொண்டிருந்த மத்தியான வேளையில்...

இந்தச் சாலையின் வலதுபக்கம் முள்வேலி போட்ட ஒரு தோட்டம். மண்ணவதாரம் எடுத்தது போன்ற பாதை, அந்தத் தோட்டத்திற்கு மத்தியில் அரைகிலோ மீட்டர்வரை ஓடிக் கொண்டிருந்தது. இந்தத் தோட்டத்திற்கு முன்பகுதியிலேயே ஒரு கல்மாளிகை. இதையொட்டி, முன்னாலும் பின்னாலும் இரண்டு கம்புகள் தூக்கி நிற்க முக்கோண வாசல் கொண்ட குடிசை. குடிசைக்குக் கதவு கிடையாது. அது தேவையும் இல்லை. அதைப் பார்த்தால், உள்ளே இருப்பது வெளியே போவதற்கு முகாந்திரம் இல்லை. வெளியே இருப்பது உள்ளே போகாமல் இருப்பதற்குத்தான் கதவு தேவை. அந்தக் குடிசைக்கு முன்னால் அந்தக் குடும்பமே சுருண்டு கிடந்தது.

அவன் குப்புறக் கிடந்தான். தார்ப்பாய்த்த நாலு முழவேட்டி, முருங்கைக் கொம்பாய்த் தோன்றிய அவன் பின் கால்களைக் காட்டியபடியே இடுப்பைப் பற்றி இருந்தது. இரண்டு கரங்களையும் குறுக்காய் மடித்து மூச்சிழுத்துக் கொண்டிருந்தான். அவன் அருகே அவள் படுத்திருந்த விதத்தைப் பார்த்தால், அவள் மூக்கில் கை வைத்தால்தான் எந்த நிலையில் இருக்கிறாள் என்று சொல்ல முடியும். கரி கரியாய், கருப்புக் கருப்பாய், சாலைபோடப் பயன்படுத்தப்படும் தாரையே நெய்தது போன்றிருந்தது அவள் புடவை. இவள் தலைமாட்டில் இரண்டு சாம்பல் நிற நாய்க்குட்டிகள். இரண்டும் சடை நாய்கள்.



9th_Tamil_Pages 122-264.indd 241 23-01-2020 20:21:31

கால்மாட்டில் மூன்று வயதுப் பெண்குழந்தை ஒருச்சாய்த்துக் கிடந்தாள். வயிற்றைக் கைகளால் அணைமுறித்துத் தூக்கத்தில் துக்கத்தைக் கலைத்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. ஒருவயதுக் குழந்தை ஒன்றுதான், ஈரத் தடயங்கள் ஏதும் இல்லாத ஈயத்தட்டை எடுத்து, 'ஏம்மா என்னைப் பெத்தே' என்பது மாதிரி அம்மாவின் வயிற்றில் அடித்துக் கொண்டிருந்தபோது அந்தப் பேரிரைச்சலைக் கேட்டு அவள்கூடக் கண்விழித்தாள். கண் முன்னால் தன்னையும், தன்னவர்களையும் நோக்கி மோதிக் கொல்லப்போவதுபோலப் பாய்ந்து வந்த அந்த ஜீப்பிற்குப் பயந்து, கோயிலில் அங்கப்பிரதட்சிணம் செய்வதுபோல் அனிச்சையாக உருண்டு உருண்டு உடம்பைச் சுழற்றினாள். கணவனின் கையையும் பிடித்து அவனையும் அவள் உருட்டிப் போட்டாள். இதற்குள் அவன் துடித்தெழுந்தான். அந்தச் சடை நாய்க்குட்டிகள் பாய்ந்து வந்த ஜீப்பை வழி மறிப்பதுபோல் முன்னால் போய் நின்றபடி பயமில்லாமல் குலைத்தன. 'எம்பி எம்பிக்' குதித்தன.

இதற்குள், ஜீப் புழுதி பறக்க நின்றது. புழுதி மண் பட்ட கண்களைத் துடைத்தபடியே அவள் கீழேயே கிடந்தாள். பிறகு கணவன் கைதூக்கிவிட எழுந்த அவள் ஜீப்காரர்களைக் கோபமாகப் பார்த்தாள்.

அவள் தனது செல்லாக் கோபத்தைப் பொறுமையாக்கியபோது, ஜீப்பின் முன் இருக்கையில் இருந்து குதித்த ஒருவரை, பின்னால் இருந்து குதித்தவர்கள் பயபக்தியுடன் சூழ்ந்திருந்தார்கள். அந்த அதிகாரிக்கு நாற்பத்து ஐந்து வயதிருக்கலாம். அவரை மற்றவர்கள் பயத்துடன் பார்ப்பதைப் பார்த்த அவனுக்குப் பயம் பிடித்தது. மனைவியை ஆணையிடும் பாவனையில் நோக்கி, அப்புறம் அடிபணியும் தொனியில் கண்களைக் கீழே போட்டு, குடிசையை நோக்கி நடந்தான். எங்கிருந்தோ கஷ்டப்பட்டுப் பிடித்து வைத்திருந்த மண்பானைத் தண்ணீரைக் கொண்டு வந்தான்.

அந்த மாளிகைப் படிக்கட்டுகளில் அவர்கள் அந்தஸ்துக்கு ஏற்ப உட்கார்ந்தார்கள். பியூன், ஒவ்வொருவருக்கும் அந்தஸ்துபடியே வாழையிலையைக் கொடுத்தார். அவர் போட்ட உணவுப் பண்டங்களும் அந்தஸ்து கனத்தைக் காட்டியது. அப்போது, மண்பானையை அங்கே கொண்டு வந்த தோட்டக்காரன், அதைத் தரையில் இறக்கி வைத்துவிட்டுத் திரும்பிப்பாராமல் நடந்த போது, அந்த அதிகாரி அடைக்கோழி மாதிரி கத்தினார். அவன் திரும்பிப் பார்த்தபோது, அவனைத் தன்னருகே வரும்படி சைகை செய்தார். உடனே பியூன் பாதிப் பிரியாணியோடு அந்தத் தட்டை எடுத்து அவனிடம் நீட்டினார். அவன் அதைத் தயங்கித் தயங்கி வாங்கி மற்றவர்கள் தட்டில் பரிமாறப் போனபோது அந்த அதிகாரி அவன் தோளைத் தட்டிக்கொடுத்தார். இலையில் இருந்த ஒரு முட்டையை எடுத்து அந்த சைவப் பிரியாணிக்கு வெள்ளை மகுடம் சூட்டி, இதர வகையறாக்களையும் அதில் அள்ளிப்போட்டு, அவனைத் தன் குடும்பத்தை நோக்கி நடக்கும்படி முதுகைத் தள்ளினார்.

அவனோ அவரிடம் ஏதோ சொல்லப் போனான். பிறகு தன்மானத்தை வயிற்றுக்குள் தின்றபடியே மனைவியை நோக்கி நடந்தான். அவள் அவனைக் கண்களால் கண்டித்தாள். பிறகு தன் தலையில் கைகளால் அடித்தபடியே அவனைத் தண்டித்தாள். ஏதோ கோபம் கோபமாய்ப் பேசினாள். என்ன பேசியிருப்பாள்?

அந்த அதிகாரி யோசித்தார். திடீரென்று எழுந்தார். அவர் எழுந்ததும் கூடவே எழப்போன மற்றவர்களைக் கையமர்த்திவிட்டு, சாப்பாட்டுத் தட்டுடன் அந்தக் குடும்பத்தை நோக்கி நடந்துவர பாதிவழியில் நின்று கவனித்தார். கணவனுடன் இதுவரை வாதாடியவள், சுற்றும் முற்றும் பார்த்தாள். மூன்று வயது மகள் அப்பா பக்கம் நின்றபடி அம்மாவைக் கோபம் கோபமாய்ப் பார்த்தாள். ஒருவயதுக் குழந்தை அந்த வட்டத்தட்டை நோக்கி, 'நிலவே நிலவே வா' என்பது போல் கையாட்டியது. அந்த நாய்க்குட்டிகள் அவனைப் பார்த்து வாலாட்டின. அவளைப் பார்த்து லேசாய்க் குரைத்தன.

## வளத்தம்மா

அம்மா இறந்த பிறகு, என் அம்மாவின் அம்மாவான வளத்தம்மாவிடம் வளர்ந்தேன். ஊரில் பிள்ளைகள் தாயை "வாளா, போளா" என்பார்கள். என் வளத்தம்மா, தன் பிள்ளைகள் தன்னை "நீங்க, நாங்க" என்று பேசும்படி செய்தவர். வயல்வரப்பிற்குப் போகாதவர். எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் வரை வளத்தம்மாவுடன், படுப்பேன். வளத்தம்மாவைப் பார்க்காமல், என்னால் இருக்க முடியாது. பிறகு, சென்னைக்குப் படிக்க வந்ததும், தூங்கி எழுந்திருக்கும் போதெல்லாம், "வளத்தம்மா, வளத்தம்மா" என்று சொல்லிக்கொண்டே எழுந்திருப்பேன். ஆனால் காலப்போக்கில், வளத்தம்மாவை மறக்கத் தொடங்கிவிட்டேன். நான் சென்னையில் பட்ட சிரமங்களும் வளத்தம்மா, மகள்கள் விஷயத்தில் மேற்கொண்ட திருமண முடிவுகளும் எனக்கு வளத்தம்மா மீது ஒருவித விருப்பமின்மையை ஏற்படுத்தின. விடுமுறையில் ஊருக்குப் போகும்போதெல்லாம், வளத்தம்மாவுடன் பழைய பாசத்துடன் பேசியதில்லை. ஆனாலும் வளத்தம்மாவிற்கு அவ்வப்போது பணம் அனுப்பிக் கொண்டிருந்தேன். அவருக்கு 90 வயது வந்துவிட்டது. திடீரென்று ஒருநாள் வளத்தம்மா இறந்து போனதாகத் தந்தி வந்தது. அலறி அடித்து ஊருக்குச் சென்றேன். அப்போதுதான் வளத்தம்மா, என்னை வளர்த்த விதம், அம்மா இல்லாத குறையை நீக்கியது, ஆசையோடு ஊட்டியது, அடுக்கடுக்கான அறிவுரைகளைச் சொன்னது – எனக்கு நினைவிற்கு வந்தது. சின்னப்பிள்ளை போலக் கேவிக்கேவி அழுதேன். இன்னும் கூட சில சமயம் அழுகிறேன். இந்தப் பின்னணியில் "வளத்தம்மா" என்ற கதையை எழுதினேன். இதில் என்னையும் தாக்கிக்கொண்டேன்.

– சு. சமுத்திரம், என் கதைகளின் கதைகள்.

அவள் புரிந்துகொண்டாள். அவர்களைப் பற்றி மட்டுமல்ல தன்னைப் பற்றியும். அவள் வயிற்றிலும் பசி முள் குத்தி வலியெடுத்தது. தானே எழுந்து கணவன் கையில் இருந்ததை, தன் கையில் கொண்டு வந்தாள். குழந்தைகள் வாயாட்டின. நாய்கள் வாலாட்டின. அப்பளம் மாதிரி – அதேசமயம் அதைப்போல் மூன்று பங்கு கனம் கொண்ட வட்ட சப்பாத்திகளைக் கொண்டு வந்தாள். அவற்றில் ஆளுக்கு இரண்டைக் கொடுத்தாள். அவற்றின் மேல் வெஜிடபிள் பிரியாணியையும், உருளைக்கிழங்குப் பொரியலையும் எடுத்து வைத்தாள்.

காணாததைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் அவர்கள், அதை, தீர்ந்துவிடக்கூடாதே என்று மெல்ல மெல்லச் சுவைத்தார்கள். செல்லமாகக் குரைத்த அந்த நாய்களுக்கு மட்டும் அவ்வப்போது கவளங்களைப் போட்டபடி அவனும் குழந்தைகளும் வாயசைத்தபோது அவள் மனம் அசைத்தாள். அவர்களை அனுதாபத்துடன் பார்த்தாள். 'இப்போ இப்படிச் சாப்பிடுகிறீர்களே… ராத்திரி என்ன செய்வீர்கள்?' என்ற பார்வை. இனிமேல் இதைக் காண முடியாது என்பதால்தான், இப்படிக் கண்ணை மூடிக்கொண்டு சாப்பிடுகிறீர்களோ என்பது போன்ற கவலைப்பார்வை… அவர்களைப் பார்த்துத் தனக்குள் ஏற்பட்ட பசிப்பார்வை…

அவள் அந்த ஈயத்தட்டை எடுத்து ஒரு கவளத்தை உருட்டி வாய்க்குள் திணித்தாள். உலர்ந்துபோய் இருந்த அவள் தொண்டை அதை உள்வாங்க மறுத்தது. அவள் தொண்டைக்குழி அதனால் அலறுவதுபோல் சத்தமிட்டது. அந்த சப்தம் நிற்பதற்கு முன்னால், பாதிவழியில் நின்ற அதிகாரி அங்கே வந்தார். கையில் வைத்திருந்த ஒரு தம்ளர் தண்ணீரை அவளிடம் நீட்டினார். உடனே அவள் அவரைப் பார்த்து லேசாய்க் கூசினாள். அந்த அதிகாரி தான் பேசுவது தமிழ் – அவளுக்குப் புரியாத மொழி என்பதைப் புரியாமலே தழுதழுக்கப் பேசினார்.



9th_Tamil_Pages 122-264.indd 243 23-01-2020 20:21:31

"உன்னை மாதிரியே கஷ்டப்பட்ட ஒரு தாய்க்குத்தான் அம்மா பிறந்தேன். உன்னை என் தாயாய் நினைத்துத்தான் கொடுக்கேன்".

அவளுக்கு, அவர் வார்த்தைகள் புரியவில்லை. ஆனால், அதன் ஆன்மா தெரிந்தது. அந்தச் சக்கைச் சொற்களுக்குள் உள்ளாடிய மனிதநேயம் அவளுக்குப் புரிந்தது. லேசாய்ச் சிரித்தாள். பிறகு சகஜமாக சாப்பிடப் போனாள். இதற்குள் அந்த அதிகாரி அவள் கணவனிடம், அரைகுறை இந்தியில் கேட்டார்.

"என்னப்பா இது? எங்கே பார்த்தாலும் ஒரே சுடுகாடாய்க் கிடக்குது... இதோ இந்த திராட்சைக் கொடிகூட இரும்புக் கம்பிகளில் கருகிக் கிடக்குதே... பச்சை இலைகள் பழுப்பேறிப் போயிருக்குதே..."

"அதை ஏன் கேட்கறீங்க? இந்த மாதிரி பஞ்சத்தை நான் பிறந்த இந்த முப்பது வருஷத்திலே பார்த்ததில்லை. மழை இப்போ மாதிரி எப்பவும் ஏமாற்றுனது இல்லை. இந்த நிலத்தை ஆண்டாண்டு காலமா நான்தான் கவனித்து வரேன். என்னுடைய எஜமானர், 'தோட்டத்திலே பிரயோசனமில்லேடா சென்னப்பா... இனிமேல் உனக்குச் சம்பளம் கிடையாது. இங்கே இருந்தால் இரு. இல்லன்னா உன் ஆட்களை மாதிரி பஞ்சம் பிழைக்க நாடோடியாய்ப் போயிடு' என்றார். இது என்ன சாமி நியாயம்? என் வேர்வையில் பழுத்த திராட்சையை விற்ற, எஜமானரு லட்சம் லட்சமாய் சம்பாதித்தபோது, சம்பளத்துக்கு மேலே கூட்டிக் கொடுக்கவில்லை. லாபம் வந்தப்போ கூலியைக் காட்டாதவர், நஷ்டம் வரும்போது கழிக்கப்படாது பாருங்கோ... ஆனா, இவரு சம்பளத்திலே கழிச்சு தந்தாக்கூடப் பரவாயில்லை. என்னையே கழிக்கப் பார்க்காரு. இது எந்த நியாயத்திலே சேர்த்தி சாமி?"

அந்தக் கிராமத்துக் கூலியாளின் எதார்த்தமான பேச்சைக் கேட்டு மலைத்துப்போன அதிகாரியின் காலுக்குள் அந்த இரண்டு சடை நாய்க்குட்டிகளும், நுழைந்து நுழைந்து சுற்றி வந்தன. அவர் இலையில் கை வைக்கும்போது அந்த கையையும், அந்தக் கை வாய்க்குப் போகும்போது அந்த வாயையும், அந்தக் கைபோன போக்கிலேயே உயரப் பார்த்தன. உடனே அவர் இலையில் இருப்பதைத் தரையில் இறக்குவார். இப்படி அவர் எடுத்தெடுத்துப் போடுவதும், அதை நாய்க்குட்டிகள் குலைத்துக் குலைத்துத் தின்பதுமாய் இருந்தன. ஒரு கட்டத்தில் அவர் இலையில் பார்த்தார். பகீரென்றது. அதில் கொஞ்சம்தான் இருந்தது. நாய்கள் மீண்டும் குலைத்தன. வாலாட்டின. அவருக்கு இது அதிகபட்சமாகத் தெரிந்தது. அவரை விடவில்லை. இடுப்பிலே எகிறின. காலில் இடறின.

திடீரென்று ஒரு சின்னக் கல் ஒரு நாய்க்குட்டி மீது விழுந்தது. ஒரு மண்கட்டி இன்னொரு குட்டிமீது விழுந்தது. மண்பட்ட நாய்க்குட்டி புத்திசாலி. எறிந்தவளை ஓரங்கட்டிப் பார்த்தது. அவளோ கோபம் கோபமாய்க் குரலிட்டபடியே கையைத் தூக்கியபோது, அது சிறிது ஓடிப்போய், ஓர் இடத்தில் மண்ணாங்கட்டியாய்ப் படுத்தது. திடீரென்று அவள் அங்கே ஓடிவந்தாள். அந்த நாயின் கழுத்தைப் பிடித்துச் சற்றுத் தொலைவில் மெதுவாகத்தான் தூக்கிப் போட்டாள். கீழே விழுந்த அந்தச் சின்ன குட்டியோ சுரணையற்றுக் கிடந்தது. உடனே அவள் அலறியடித்து நெருங்கினாள். அதுவோ அவள் தன்னை மீண்டும் தாக்க வருவதாய் அனுமானித்து, ஒரு காலைத் தூக்கியபடியே திராட்சைத் தோட்டத்திற்குள் ஓடியது. அப்புறம் அதன் ஓல ஒலி மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது.

அவள் வயிற்றுக்கும் சூடு பிடித்தது. பட்டினியால் பழக்கப்பட்ட மரத்துப்போன அவள் வயிறு இப்போது வாயை வம்புக்கிழுத்தது. இரண்டு கவளம் மட்டுமே எடுக்கப்பட்ட அந்தத் தட்டை அவள் ஆசையோடு பார்த்தாள். பிறகு அதைக் குழந்தை மாதிரி மடியில் வைத்துக்கொண்டு ஒரு கவளத்தை வாய்க்குள் போட்டாள். இவ்வளவு ருசியாய் அவள் சாப்பிட்டதாய் நினைவில்லை. தட்டில் இன்னும்



9th_Tamil_Pages 122-264.indd 244 23-01-2020 20:21:31

முக்கால்வாசிக்கு மேலேயே இருந்தது. உண்டு... உண்டு... சுவையில் சொக்கிச் சொக்கி அவள் லயித்தபோது அந்த நாயின் ஓல ஒலி, அவளைச் சுண்டி இழுத்தது. 'எம்மா நீயா இப்படிச் செய்துட்டே...?' என்பதுபோல் அது ஒலித்தது. அவள் தட்டைக் கீழே வைத்துவிட்டு, எச்சில் கையைத் தரையில் ஊன்றியபடியே எழுந்தாள். சுற்றும் முற்றும் கண்களைச் சுற்றவிட்டாள். காய்ந்துபோன திராட்சைக் கொடிகள் படர்ந்த கம்பிப் பந்தலைத் தாங்கிய ஒரு கல்தூணின் கீழே அந்த நாய்க்குட்டி ஈனமுனகலாய்க் கிடந்தது. அவளைப் பார்த்து அப்போதும் வாலாட்டியது.

அவள் அந்த நாய்க்குட்டியை வாரி எடுத்தாள். அதன் முதுகைத் தடவி விட்டாள். அந்தக் குட்டியைத் தன் மடியில் சம்மணக் கால்களை அங்குமிங்குமாய் ஆட்டி அதைத் தாலாட்டினாள். பிறகு அந்தத் தட்டைத் தன் பக்கமாய் இழுத்து, அதில் இருந்ததைக் கவளம் கவளமாய் உருட்டி, அந்தச் சின்னக் குட்டிக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள். அந்தச் செல்லக்குட்டியோ பிகு செய்தபடியே அவள் கையை லாவகமாய் விட்டுவிட்டு, கவளத்தை மட்டும் கவ்விக் கொண்டே இருந்தது.

அந்தத் தட்டில் இருந்த உணவு குறையக்குறைய அவள் தாய்மை கூடிக்கொண்டே இருந்தது.

### நூல் வெளி

சு. சமுத்திரம் திருநெல்வேலி மாவட்டம், திப்பணம்பட்டியைச் சேர்ந்தவர். தமது பெயரைப் போலவே ஆழமும் விரிவும் வளமும் கொண்டவர்; முந்நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்; வாடாமல்லி, பாலைப்புறா, மண்சுமை, தலைப்பாகை, காகித உறவு போன்றவை இவரின் புகழ்பெற்ற சிறுகதைத் தொகுப்புகளாகும். 'வேரில் பழுத்த பலா' புதினம் சாகித்திய அகாதெமி விருதையும் 'குற்றம் பார்க்கில்' சிறுகதைத் தொகுதி தமிழக அரசின் பரிசையும் பெற்றுள்ளன.

## கற்பவை கற்றபின்...

1. 'பிறர்க்கு உதவி செய்வதற்கு மொழி தேவையில்லை' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறை மேடையில் நடித்துக் காட்டுக.

2. கதையைத் தொடர்ந்து எழுதித் தலைப்பிடுக.

   சுண்டெலிகளுக்குப் பூனையால் மிகவும் துன்பமான நேரம். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று சுண்டெலிகளைப் பிடித்துத் தின்றது பூனை. சுண்டெலிகள் ஒன்றுசேர்ந்து, என்ன செய்வது என்று ஆலோசித்தன. அவை மேலும் மேலும் ஆலோசித்தன. ஆனால், ஒரு முடிவும் கிடைக்கவில்லை.

   பிறகு ஒரு சின்னச் சுண்டெலி சொன்னது:

   பூனைக்கு என்ன செய்யவேண்டும் என்று நான் சொல்கிறேன். பூனை எப்போது நம்மைப் பிடிக்க வருகிறது என்று நமக்குத் தெரிவதில்லை. கட்டாயம் நாம் அதைச் செய்தாக வேண்டும்.....

LSQVK1



9th_Tamil_Pages 122-264.indd 245 23-01-2020 20:21:31

மனிதம்

கூ

கற்கண்டு

# அணியிலக்கணம்

LSZRLN

## அணி – அழகு

செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும். சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது 'அணி' இலக்கண இயல்பாகும்.

## உவமைஅணி

அணிகளில் இன்றியமையாதது உவமையணி ஆகும். மற்ற அணிகள் உவமையிலிருந்து கிளைத்தவையாகவே உள்ளன.

மலர்ப்பாதம் – மலர் போன்ற பாதம்

இத்தொடரில் பாதத்துக்கு மலர் உவமையாகக் கூறப்படுகிறது.

பாதம் - பொருள் (உவமேயம்)

மலர் - உவமை

போன்ற - உவம உருபு

*இனிய உளவாக இன்னாத கூறல்*

*கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.*

இதில் உவமையணி அமைந்துள்ளது.

## உருவக அணி

கவிஞன், தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணி, அதற்கு உவமையாகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான். உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக்கூறும் இத்தன்மையே 'உருவகம்' எனக் கூறப்படும். உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.

(எ.கா.)

*இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக*
*வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி*
*அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்*
*பைங்கூழ் சிறுகாலைச் செய்.*

இப்பாடலில், இன்சொல் – நிலமாகவும், வன்சொல் – களையாகவும், வாய்மை – எருவாகவும், அன்பு – நீராகவும், அறம் – கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

## பின்வருநிலை அணிகள்

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டும் பல இடங்களிலும் வருதலே 'பின்வருநிலை' அணியாகும். இது மூன்று வகைப்படும்.

### சொல் பின்வருநிலையணி

முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது சொல் பின்வருநிலை அணியாகும். (எ.கா.)

*துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*

*துப்பாய தூஉம் மழை.*

இக்குறளில்' துப்பு' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருள்களைத் தருகிறது.

துப்பார்க்கு – உண்பவர்க்கு; துப்பு – நல்ல, நன்மை; துப்பு – உணவு என்று பல பொருள்களில் வருவதைக் காணலாம்.

### பொருள் பின்வருநிலையணி

செய்யுளில் முன்வந்த ஒரு சொல்லின் பொருளே பின்னரும் பல இடங்களில் வருவது பொருள் பின் வருநிலையணி ஆகும். (எ.கா.)

*அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா*

*நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்*

*விண்டன கொன்றை விரிந்த கருவிளை*

*கொண்டன காந்தள் குலை.*

இச்செய்யுளில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்தன, கொண்டன



9th_Tamil_Pages 122-264.indd 246 23-01-2020 20:21:31

ஆகிய சொற்கள் மலர்ந்தன என்ற ஒரு பொருளையே தந்தன.

*கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை.*

இக்குறட்பாவில் செல்வம், மாடு ஆகிய இரு சொற்களுமே செல்வத்தையே குறிக்கின்றன.

## சொற்பொருள் பின்வருநிலையணி

முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பல இடங்களிலும் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும். (எ.கா.)

*எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு.*

இக்குறட்பாவில் 'விளக்கு' என்னும் சொல் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

## வஞ்சப்புகழ்ச்சியணி

வஞ்சப்புகழ்ச்சியணி என்பது புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதுமாகும். (எ.கா.)

*தேவ ரனையர் கயவர் அவருந்தாம்*
*மேவன செய்தொழுக லான்.*

கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று புகழப்படுவது போலத் தோன்றினாலும், கயவர்கள் இழிந்த செயல்களையே செய்வர் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துகிறது. எனவே, இது புகழ்வது போலப் பழிப்பது ஆகும்.

*பாரி பாரி என்றுபல ஏத்தி,*
*ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்*
*பாரி ஒருவனும் அல்லன்;*
*மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே*

இப்பாடலின் பொருள்: புலவர் பலரும் பாரி ஒருவனையே புகழ்கின்றனர். பாரி ஒருவன் மட்டுமா கைமாறு கருதாமல் கொடுக்கின்றான்? மழையும்தான் கைமாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகத்தைப் புரக்கிறது. இது பழிப்பது போலப் புகழ்வது ஆகும்.

இது பாரியை இகழ்வது போலத் தோன்றினாலும், பாரிக்கு நிகராகக் கொடுப்பவரில்லை என்று புகழ்கிறது.

## கற்பவை கற்றபின்...

1. கீழ்க்காணும் குறட்பாக்களில் அமைந்த அணி வகையைக் கண்டறிக.

 அ) *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு*
 *ஆழி எனப்படு வார்.*

 ஆ) *பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்*
 *அறம்நாணத் தக்கது உடைத்து.*

 இ) *தீயவை தீய பயத்தலால் தீயவை*
 *தீயினும் அஞ்சப் படும்.*

2. உவமையணி அமைந்த பாடல் அடிகளை எழுதுக.

3. கீழ்க்காணும் புதுக்கவிதையில் அமைந்த அணியினை எழுதுக.

 *விருட்சங்கள்*
 *மண்ணரசி மடக்காமலேயே*
 *பிடித்துக்கொண்டிருக்கும்*
 *பச்சைக் குடைகள்.*

LT9HNB



9th_Tamil_Pages 122-264.indd 247 23-01-2020 20:21:31

# மதிப்பீடு

## பலவுள் தெரிக.

1. இமயத்துக் கோடு உயர்ந்தன்ன – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

   அ) கொம்பு　ஆ) மலையுச்சி　இ) சங்கு　ஈ) மேடு

2. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை

   அ) நிலையற்ற வாழ்க்கை　ஆ) பிறருக்காக வாழ்தல்　இ) இம்மை மறுமை　ஈ) ஒன்றே உலகம்

3. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல்

   அ) ஒரு சிறு இசை　ஆ) முன்பின்　இ) அந்நியமற்ற நதி　ஈ) உயரப் பறத்தல்

4. யா மரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

   அ) குறிஞ்சி　ஆ) மருதம்　இ) பாலை　ஈ) நெய்தல்

5. கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
   மாடல்ல மற்றை யவை – இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?

   அ) சொல் பின்வருநிலையணி　ஆ) பொருள் பின்வருநிலையணி

   இ) சொற்பொருள் பின்வரு நிலையணி　ஈ) வஞ்சப் புகழ்ச்சியணி

## குறுவினா

1. தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையச் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?
2. பிடிபசி களைஇய பெருங்கை வேழம் – இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.
3. குறுந்தொகை – பெயர்க்காரணம் எழுதுக.
4. நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன். இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.

## சிறுவினா

1. உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துகளாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை?
2. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.
3. பழங்களை விடவும் நசுங்கிப் போனது – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
4. மணல் விளையாட்டு என்னும் தலைப்பில் சிறு கவிதை படைக்க.
5. "யா" மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.
6. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

## நெடுவினா

1. தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனிநாயக அடிகளாரின்வழி நிறுவுக.
2. 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.



9th_Tamil_Pages 122-264.indd 248　23-01-2020 20:21:31

## மொழியை ஆள்வோம்

### ஒப்பிட்டுச் சுவைக்க.

#### நூல் மதிப்புரை அன்றும் இன்றும்

#### பாஞ்சாலி சபதம்

இது மிக அழகிய வர்ணனைகள் நிறைந்த ஒரு காவியம், பிரஹ்ம ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியவர்களால் இயற்றப் பெற்றது.

தர்மங்கள் நிறைந்த, ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தில் பொறாமையே உருவாக வந்த துரியோதனன் தனது தாய் மாமனாகிய சகுனியைக் கொண்டு பஞ்ச பாண்டவர்களில் மூத்தோனாகிய தர்மபுத்திரருடன், அவருடைய ராஜ்யத்தை எல்லாம் பிடுங்கிக் கொண்டு அவரையும் அவரது சகோதரர்களையும் காட்டுக்குத் துரத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், சூதாடும்படி செய்விக்கின்ற பாகத்தை பிரஹ்ம ஸ்ரீ பாரதி அவர்கள் செய்யுள் எழுதியுள்ளார்.

பாரதியவர்களின் தமிழ் நடையைப் பற்றியும் செய்யுள் விசேஷத்தைப் பற்றியும் தமிழ் நாட்டினரில் பெரும்பான்மையோரும் அறிவர் என நம்புகிறோம். ஆசிரியர் இப்புஸ்தகத்தின் ஒரு பிரதியை சென்னை கவர்னர் அவர்களுக்கு அனுப்பியிருந்ததாகவும் அவர் அதை வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டதாக ஆசிரியருக்குக் கடிதம் எழுதியதாகவும் கேள்விப்படுகிறோம்.

பாஷாபிமானிகளும் தேசாபிமானிகளும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது. இதன் விலை அணா எட்டு, தபால் செலவு வேறு. வேண்டியவர்கள் நமது ஆபீசுக்கேனும் அல்லது பிரஹ்ம ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியவர்கள், புதுச்சேரி யென்ற விலாசத்திற்கேனும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

*'ஞான பாநு' மாதப்பத்திரிகை,*
*ஆசிரியர் எஸ். சுப்பிரமணிய சிவா,*
*சென்னை, நவம்பர் 1913.*

#### நூல் மதிப்புரை

இருபதாம் நூற்றாண்டுச் சூழலில்தான் கம்பரின் இராமாயணம் இலக்கியம் எனத் தகுதி பெற்றதோடு ஆய்வுக்குரிய பெருநூலாகவும் கருதப்படுகிறது. இலக்கிய நோக்கில் கம்பர் நூல், எவ்வாறு காவியம் எனச் சிறக்கிறது? என்பதைப் பேராசிரியர் அ. பாண்டுரங்கன் மிக விரிவாக ஆராய்கிறார். வால்மீகியிலிருந்து கம்பர் வேறுபடும் இடங்களை விரிவாகத் தொகுத்து உரைக்கிறார். தண்டியின் பாவிகம் என்ற கருத்தாக்கத்தின் மூலம் இக்காப்பியத்தின் உள்ளுறையை, கவிக்குரலை நுட்பமாக எடுத்துரைக்கிறார். அரிஸ்டாட்டில் முதல் ஆபர் கிராம்பி வரையிலான காவியம் பற்றிய மேற்கத்தியர் கோட்பாடுகளையும் தண்டி முதல் வ.சுப. மாணிக்கம் வரையிலான நம்மவர்களின் கோட்பாடுகளையும் தக்க முறையில் பயன்படுத்திக் கம்பர் காவியத்தின் கட்டமைப்பு, பாத்திரப் படைப்பு, கவிக்குரல் முதலியவற்றைத் தெளிவுபடுத்துகிறார். இம்முறையில் சிறப்பான ஆய்வுநூல் என இந்நூலை மதிப்பிடலாம்.

கவித்துவ இயக்கத்தினுள் பக்தியும், புராணிகமும் பகுதிகளாவதைத் தவிர்க்க இயலுமா என்ற கேள்வியோடு கம்பர் காவிய ஆய்வை ஆழமாகத் தொடர்வதற்கு இடம் இருக்கிறது. வரலாற்றுச் சூழலிலிருந்து, இலக்கிய இரசனை ஆய்வை விலக்கிச் செய்ய முடியுமா என்பதும் கேள்வி. இந்தத் திசைகளில், கம்பர் காவிய ஆய்வை ஆசிரியர் தொடரவேண்டும்.

*'நிகழ்' – நூல் திறனாய்வுகள்*
*100; ஞானி, அறிவன்;*
*டிசம்பர் 2001*



9th_Tamil_Pages 122-264.indd 249 23-01-2020 20:21:31

**மொழி பெயர்க்க.**

*A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The crow sat on the deer and started poking. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, assuming it dead, and went after the turtle. Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up the turtle and quickly took it away from the hunter. From this Panchatantra story, we learn that the teamwork can achieve great results.*

**பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.**

ஆசிரியர் மாணவர்களிடம் மாணவர்களே கடவுளரையும் தலைவர்களையும் குழந்தையாகக் கருதி எழுதப்பட்ட சிற்றிலக்கிய வகை பற்றித் தெரியுமா தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழும் ஒன்று என்று கூறினார்

பிள்ளைத் தமிழ் நூல்கள் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் முதலியன

அடடா என்று சிலிர்ப்பூட்டும் பட்டறிவைப் படிப்பவர்க்கு அளிக்கும் வகையில் குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மிகச் சிறந்ததாகத் திகழ்கிறது

**சொற்றொடர் உருவாக்குக.**

1. செந்தமிழும் சுவையும் போல
2. பசுமரத்தாணி போல
3. உள்ளங்கை நெல்லிக்கனி போல்
4. அத்தி பூத்தாற் போல
5. மழைமுகம் காணாப் பயிர் போல

**வடிவம் மாற்றுக.**

**பாடலில் காணும் இலக்கிய வடிவங்களையும் அவற்றுக்குப் புகழ்பெற்றோரையும் கண்டறிந்து எழுதுக.**

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்குஓர்
   சயங்கொண்டான்; விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவைஉலா
   அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
   வசைபாடக் காள மேகம்;
பண்பாய பகர்சந்தம் படிக்காசு
   அலாதொருவர் பகர ஒணாதே.

.............................................
.............................................
.............................................
.............................................
.............................................
.............................................
.............................................
.............................................

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.



9th_Tamil_Pages 122-264.indd 250    23-01-2020 20:21:31

### நூல் மதிப்புரை எழுதுக.

*நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.*

### நயம் பாராட்டுக.

*"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்*
*தம்முயிர்போல் எண்ணி உள்ளே*
*ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்*
*யாவர்அவர் உள்ளம்தான் சுத்த*
*சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்*
*இடம் என நான் தெரிந்தேன் அந்த*
*வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்*
*சிந்தை மிக விழைந்த தாலே"*

*– வள்ளலார்*

## மொழியோடு விளையாடு

### எழுத்துகளை முறைப்படுத்திச் சொற்களைக் கண்டுபிடிக்க.

1. புன்பமொப்லமைழி , 2. யனிநேம்தம , 3. கச்வப்ஞ்புசிழ்ச

4. தைக்விதுகபு , 5. டுசிப்காட்ஞ்ப

### அகராதி காண்க.

குரிசில், தலையளி, நயம், உய்த்தல், இருசு

### தொகைச்சொற்களைக் கொண்டு பத்தியைச் சுருக்குக.

சேர, சோழ, பாண்டிய அரசர்களிடம் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, தரைப்படை ஆகியவை இருந்தன. அவர்கள் மா, பலா, வாழை ஆகிய கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில் அவர்களின் ஆட்சிப்புகழ் பரவியிருந்தது. தமிழகத்தின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் உள்ள புலவர்கள் இவ்வரசர்களை இம்மையிலும் மறுமையிலும் வாழ்கவென்று வாழ்த்தினர்.

### வினைப்பகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக.

பூங்கொடி நேற்றுப் பள்ளிக்குச் ______ (செல்), தன் தோழிகளைக் ______ (காண்), மகிழ்ச்சியுடன் ______ (உரை); பின்னர் வங்கிக்குப் ______ –(போ) தான் கூடுதலாகச் ______ (செலுத்து) தொகையைத் திரும் ______ (பெறு) ______ (கொள்) வந்தாள். வரும் வழியில் வீட்டுக்கு ______ (வேண்டு) பொருள்களை ______ (வா). அங்கு ______ (நில்) பேருந்தில் ______ (ஏறு) வீடு ______ (திரும்பு) .



9th_Tamil_Pages 122-264.indd 251 23-01-2020 20:21:32

**பொருத்தமான தமிழ் எண்களைக் கொண்டு நிரப்புக.**

தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் _____ ஆகும்; இவை முதலெழுத்து, சார்பெழுத்து என்று _____ பிரிவாகப் பிரிக்கப்படும்; _____ உயிரெழுத்துகள், _____ மெய்யெழுத்துகள் ஆகிய _____ எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும்; இவற்றைச் சார்ந்து பிறப்பவை சார்பெழுத்துகள் என்றழைக்கப்படுகின்றன; சார்பெழுத்துகள் _____ வகைப்படும்.



**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

## செயல்திட்டம்

இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர் சிலரின் படங்களையும் கவிதைகளையும் திரட்டி, படக் கவிதைத்தொகுப்பு உருவாக்குக.

## நிற்க அதற்குத் தக

நான் தலைமைப் பொறுப்பிற்கு வந்தால் ...

1. அனைவரிடமும் பாகுபாடின்றி நடந்து கொள்வேன்.
2. இயன்றவரை பிறருக்கு உதவுவேன்.
3. பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பேன்.
4. ………………………………………………………………………

## கலைச்சொல்லாக்கம்

மனிதம் = Humane    ஆளுமை = Personality    பண்பாட்டுக் கழகம் = Cultural Academy

கட்டிலாக் கவிதை = Free verse    உவமையணி = Simile    உருவக அணி = Metaphor



9th_Tamil_Pages 122-264.indd 252 23-01-2020 20:21:32

## அறிவை விரிவு செய்

1. *சிற்பியின் மகள் – பூவண்ணன்*
2. *அப்பா சிறுவனாக இருந்தபோது – அலெக்சாந்தர் ரஸ்கின் (தமிழில் நா. முகமது செரீபு)*

## இணையத்தில் காண்க.

http://www.tamilheritage.org/thfcms/index.php/2008-/2009-06-13-06-32-59
http://www.tamilvu.org/library/l1220/html/l1220ind.htm
http://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-23.htm
http://www.chennailibrary.com/samuthiram/samuthiram.html
https://vannathasan.wordpress.com/2010/07/30/**கவிதைகளுக்கு–கல்யாண்ஜி**

## இணையச் செயல்பாடுகள்


B561_9_TAM_T3


tamilwordgame இல்
தேடிப் பிடி புதுச் சொற்களை!



படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி tamilwordgame என்னும் இணையச் செயலியின் பக்கத்திற்குச் செல்லவும். அங்குக் கொடுக்கப்பட்டிருக்கும் play பொத்தானைச் சொடுக்கவும்.
- திரையில் Easy, Medium, Hard ஆகிய மூன்று தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து வார்த்தைகளை இணைத்து விளையாடவும்.
- உதாரணத்திற்கு Easy என்பதைச் சொடுக்கியதும் திரையின் வலது பக்கத்தில் எழுத்துக்கட்டகம் தோன்றும். அதில் உள்ள எழுத்துகளை இணைத்துப் புதுச் சொற்களை உருவாக்கவும்.
- உருவாக்கும் சொற்கள் சரியாக இருப்பின் இடது பக்கத்தில் உள்ள கரும்பலகையில் இடம்பெறும். இது போன்று மீண்டும் மீண்டும் நீங்கள் சொற்கள் உருவாக்கும் செயல்பாட்டைத் தொடரலாம்.







செயல்பாட்டிற்கான உரலி
/http://tamilwordgame.appspot.com



9th_Tamil_Pages 122-264.indd 253 23-01-2020 20:21:33

# திருக்குறள்

## 16. பொறையுடைமை

1) *அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை.*

2) *பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை*
*மறத்தல் அதனினும் நன்று.*

3) *இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்*
*வன்மை மடவார்ப் பொறை.*

4) *நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை*
*போற்றி ஒழுகப் படும்.*

5) *ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்*
*பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.*

6) *ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்*
*பொன்றும் துணையும் புகழ்.*

7) *திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து*
*அறன்அல்ல செய்யாமை நன்று.*

8) *மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்*
*தகுதியான் வென்று விடல்.*

9) *துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்*
*இன்னாச்சொல் நோற்கிற் பவர்.*

10) *உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
*இன்னாச்சொல் நோற்பாரின் பின்.*

## 21. தீவினையச்சம்

1) *தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்*
*தீவினை என்னும் செருக்கு.*

2) *தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்.*

3) *அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய*
*செறுவார்க்கும் செய்யா விடல்.*

4) *மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
*அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.*

5) *இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்*
*இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.*

6) *தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால*
*தன்னை அடல்வேண்டா தான்.*

7) *எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை*
*வீயாது பின்சென்று அடும்.*

8) *தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
*வீயாது அடிஉறைந் தற்று.*

9) *தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்*
*துன்னற்க தீவினைப் பால்.*

10) *அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்*
*தீவினை செய்யான் எனின்.*



9th_Tamil_Pages 122-264.indd 254 23-01-2020 20:21:33

## 42. கேள்வி

1) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

2) செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

3) செவிஉணவிற் கேள்வி யுடையார் அவிஉணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.

4) கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

5) இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

6) எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

7) பிழைத்துஉணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர்.

8) கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

9) நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

10) செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?

## 51. தெரிந்து தெளிதல்

1) அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்.

2) குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாண்உடையான் கட்டே தெளிவு.

3) அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு.

4) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

5) பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

6) அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றுஅவர்
பற்றிலர் நாணார் பழி.

7) காதன்மை கந்தா அறிவுஅறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாந் தரும்.

8) தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

9) தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

10) தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.



9th_Tamil_Pages 122-264.indd 255 23-01-2020 20:21:33

## 59. ஒற்றாடல்

1) ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

2) எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

3) ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல்.

4) வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று.

5) கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

6) துறந்தார் படிவத்தர் ஆகிஇறந்து ஆராய்ந்து
என்செயினும் சோர்வுஇலது ஒற்று.

7) மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று.

8) ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

9) ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்.

10) சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை.

## 66. வினைத்தூய்மை

1) துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

2) என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

3) ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

4) இடுக்கண் படினும் இழிவந்த செய்யார்
நடுக்குஅற்ற காட்சி யவர்.

5) எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

6) ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

7) பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

8) கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

9) அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

10) சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துநீர் பெய்திரீஇ யற்று.



9th_Tamil_Pages 122-264.indd 256 23-01-2020 20:21:34

## 81. பழைமை

1) பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

2) நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு
உப்புஆதல் சான்றோர் கடன்.

3) பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை?

4) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின்.

5) பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின்.

6) எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

7) அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

8) கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின்.

9) கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

10) விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

## 82. தீ நட்பு

1) பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது.

2) உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?

3) உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

4) அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

5) செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

6) பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுஉடையார்
ஏதின்மை கோடி உறும்.

7) நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும்.

8) ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்ஆடார் சோர விடல்.

9) கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

10) எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.



9th_Tamil_Pages 122-264.indd 257 23-01-2020 20:21:34

## 84. பேதைமை

1) பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல்.

2) பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல்.

3) நாணாமை நாடாமை நார்இன்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

4) ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்.

5) ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு.

6) பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேல் கொளின்.

7) ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

8) மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்.

9) பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதுஒன்று இல்.

10) கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

## 85. புல்லறிவாண்மை

1) அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு.

2) அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம்.

3) அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

4) வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

5) கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.

6) அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

7) அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

8) ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

9) காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.

10) உலகத்தார் உண்டென்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.



9th_Tamil_Pages 122-264.indd 258 23-01-2020 20:21:34

## 86. இகல்

1) இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

2) பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை.

3) இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும்.

4) இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

5) இகல்எதிர் சாய்ந்துஒழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர்.

6) இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து.

7) மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர்.

8) இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.

9) இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு.

10) இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்
நன்னயம் என்னும் செருக்கு.

## 96. குடிமை

1) இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

2) ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

3) நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

4) அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

5) வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று.

6) சலம்பற்றிச் சால்பில செய்யார்மாசு அற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்.

7) குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

8) நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

9) நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

10) நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம் வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

## 99. சான்றாண்மை

1) கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

2) குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று.

3) அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

4) கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

5) ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

6) சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்.

7) இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?

8) இன்மை ஒருவற்கு இளிவன்று சால்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

9) ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

10) சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

## 102. நாண் உடைமை

1) கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

2) ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறுஅல்ல
நாண்உடைமை மாந்தர் சிறப்பு.

3) ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு.

4) அணிஅன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃதுஇன்றேல்
பிணிஅன்றோ பீடு நடை?

5) பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.

6) நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

7) நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்.

8) பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

9) குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாணின்மை நின்றக் கடை.

10) நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று.



9th_Tamil_Pages 122-264.indd 260 23-01-2020 20:21:34

## 104. உழவு

*1) சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.*

*2) உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து.*

*3) உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்*
*தொழுதுஉண்டு பின்செல் பவர்.*

*4) பலகுஉடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்*
*அலகுஉடை நீழ லவர்.*

*5) இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது*
*கைசெய்துஊண் மாலை யவர்.*

*6) உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்*
*விட்டேம்என் பார்க்கும் நிலை.*

*7) தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்துஎருவும்*
*வேண்டாது சாலப் படும்.*

*8) ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்*
*நீரினும் நன்றுஅதன் காப்பு.*

*9) செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து*
*இல்லாளின் ஊடி விடும்.*

*10) இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலம்என்னும் நல்லாள் நகும்.*

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும்; அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

- திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
- வகுப்பு வாரியாகத் திருக்குறள் ஒப்பித்தல் போட்டி வைக்கலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான கதைகள், நாடகங்களை இலக்கியமன்ற கூட்டங்களில் நடத்தச் செய்யலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து "வினாடி வினா" நடத்தலாம்.
- உலகப் பொதுமுறையாம் திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.

குறிப்பு: மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்கு அன்று.



9th_Tamil_Pages 122-264.indd 261 23-01-2020 20:21:34

ஒன்பதாம் வகுப்பு – தமிழ்
ஆக்கம்

## ஆலோசனைக் குழு

முனைவர் இ. சுந்தரமூர்த்தி,
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் சி. சுப்பிரமணியன்,
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் கி. நாச்சிமுத்து,
மேனாள் பேராசிரியர், மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

முனைவர் வீ. அரசு,
மேனாள் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

## மேலாய்வாளர் குழு

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம், மேனாள் தமிழியல் துறைத்தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

திரு பிரபஞ்சன், எழுத்தாளர், புதுவை.

முனைவர் பா. மதிவாணன், தமிழ்த்துறை தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

திரு. மா. இராமகிருட்டினன், முதன்மைக்கல்வி அலுவலர், திருச்சி.

## பாட வல்லுநர் குழு

முனைவர் மு. சுதந்திரமுத்து,
இணைப்பேராசிரியர் (ப.நி), மாநிலக் கல்லூரி, சென்னை.

முனைவர் ப. டேவிட் பிரபாகர், இணைப்பேராசிரியர்
சென்னை கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை.

முனைவர் த. புகழேந்தி, இணைப்பேராசிரியர்
நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை.

முனைவர் ச. திருஞானசம்பந்தம்,
இணைப்பேராசிரியர் (ப.நி), தமிழ்த்துறை உயராய்வு மையம் , அரசர் கல்லூரி, திருவையாறு.

முனைவர் சு. தாமரைப்பாண்டியன்,
உதவிப்பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி , சென்னை.

முனைவர் இரா. இலட்சாராமன், முதல்வர் (ப.நி), ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் அறிவியல் கல்லூரி, மயிலம், விழுப்புரம்.

முனைவர் க பலராமன்,
உதவிப்பேராசிரியர், நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை.

# கலை மற்றும் வடிவமைப்புக் குழு

## வரைபடம்

திரு க.த. காந்திராஜன்,
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை

திரு ச.கௌதம்,

திரு பொ. வள்ளிநாயகம், ஓவிய ஆசிரியர்,
ஸ்ரீமந்திரமூர்த்தி மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி.

மு. விசுவேசுவர ஆசிவேல் குமரன், ஓவிய ஆசிரியர்,
அ. மேல்நிலைப் பள்ளி, முண்டியம்பாக்கம், விழுப்புரம்.

கா. புகழேந்தி, பட்டதாரி ஆசிரியர்,
அரசு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை.

திரு ஏ. ஜேம்ஸ்பாண்ட், ஓவிய ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, அரசர்குளம், அறந்தாங்கி, புதுக்கோட்டை.

திரு. ஜேசுநாதன், ஓவியர், சென்னை.

திரு க. சந்திவீரன், அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை

திரு. வெ. கார்த்திகேயன், அரசு கவின் கலைக்கல்லூரி , சென்னை

திரு. தீபக் ராஜன், வேல்முருகன், பிரமோத்,
திரு. சார்லஸ், கோகுல கிருஷ்ணன்,
ஓவியர்கள், சென்னை.

## நன்றி

ஓவியர்கள்
திரு. கோபுலு
திரு. மாதவன்
திரு. மனோகர் தேவதாஸ்
திரு. மணியன் செல்வன்
திரு. பெருமாள்
ஓவிய ஆசிரியர் திரு. எஸ். முரளிதரன், சேலம்.

## அட்டைப்படம்

கதிர் ஆறுமுகம்

## ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனுசாமி

## பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி ப. சுமதி, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவல்லிக்கேணி, சென்னை.

திரு நா. ஹரிகுமார், பட்டதாரி ஆசிரியர், இராஜாமுத்தையா மேனிலைப்பள்ளி, இராஜாஅண்ணாமலைபுரம், சென்னை.

திரு வெ. பாலமுருகன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, ஆரம்பாக்கம், திருவள்ளூர்.

புலவர் க. சிவகுமார், பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, ஏலாக்குறிச்சி, அரியலூர்.

திரு மு. பாலகிருஷ்ணன், பட்டதாரி ஆசிரியர், எஸ். எஸ். என். அரசு மேல்நிலைப் பள்ளி, கொம்மடிக்கோட்டை, தூத்துக்குடி.

திரு வே. சங்கர்ராம், பட்டதாரி ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சங்கரன்கோவில், திருநெல்வேலி.

திருமதி வெ. மீனாட்சி, பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, ஏனாத்தூர், காஞ்சிபுரம்.

முனைவர் கோ. நாராயணமூர்த்தி, பட்டதாரிஆசிரியர்,
பாரதி மேல்நிலைப் பள்ளி, நாமக்கல்.

திரு அ. பாண்டியன், பட்டதாரி ஆசிரியர்,
அ.வே.நா.செ. அரசு மேல்நிலைப் பள்ளி, ஜி.அரியூர், விழுப்புரம்.

திரு இரத்தின. புகழேந்தி, பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, மன்னம்பாடி, கடலூர்.

திரு இரா. பாண்டியன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, வெண்பாவூர், பெரம்பலூர்.

திரு க. வேல்முருகன், பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலை பள்ளி, ஆர்ப்பாக்கம், திருவண்ணாமலை.

திரு ஆ. சின்னதுரை, பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, தேவியாக்குறிச்சி, சேலம்.

திரு அ. இரவிச்சந்திரன், முதுநிலை ஆசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மணப்பாறை, திருச்சி.

திரு கும. திருப்பதி, பட்டதாரி ஆசிரியர்,
மு.நா.செ. உயர்நிலைப்பள்ளி, கொப்பனாபட்டி, புதுக்கோட்டை.

கவிஞர் நா. முத்துநிலவன், தமிழாசிரியர் (ஓய்வு),
அரசு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை.

திருமதி கோ. தாட்சாயணி, முதுநிலை ஆசிரியர்,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி , திருவள்ளூர்.

திரு அ. அந்தோணிராஜ், முதுநிலை தமிழாசிரியர்,
புனித வளனார் மேல்நிலைப் பள்ளி, மஞ்சக்குப்பம், கடலூர்.

## கணினித் தொழில்நுட்பம்

திரு இரவிக்குமார், விரிவுரையாளர்,
மா.ஆ.க.ப.நி, சென்னை.

செல்வி த. ரேவதி, பட்டதாரி ஆசிரியர்,
ந.உ.நி.ப. இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை.

## ஒருங்கிணைப்பு

முனைவர். க.சு. சங்கீதா, உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

## வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் நா. அருள்முருகன், இணை இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–6.

## ஒருங்கிணைப்பு உதவி & தட்டச்சர்

திருமதி டி.தே. ஷர்மிளா, பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி, மோசூர், வேலூர்.

திருமதி. ப. குமுதா,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

## வரைகலை & வடிவமைப்பு

பழையவலம் திரு. பா. இராமநாதன், சென்னை.
திரு. மனோகர் ராதாகிருஷ்ணன், சென்னை.
செல்வன். அருண் காமராஜ் பழனிசாமி, கணக்கன் குப்பம்.
திரு. பிரசாந்த் சின்னப்பராஜ், அணிலாடி.
திரு. காமாட்சிபாலன் ஆறுமுகம், ஆண்டிபட்டி.

## In-House - QC

திரு. கோபு ராசுவேல், சென்னை.
திரு. கோபு சுப்பையன்
திரு. எம். சுப்பையன்

இந்நூல் 80 GSM எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர் ;